876

உ

ஸ்ரீமார்க்கசகாயம்.

மலர்ந்த மல்லிகை.

அல்லது.

மனைவியின் மதி

Blossom Jasmine

OR

Wife's Wit

7 -NOV 1924

876
1925

(First Edition 1000)

BY
V. S. Arumuga Mudaliyar,
Auditor, Comptroller's Office,
BANGALORE.

PRINTED & PUBLISHED BY
BRIGHT & Co., BANGALORE.

Copy Right Registered.

0-13-0 POSTAGE EXTRA
தபால் வேறு. } 0-3-0

1924.

O-:13MAMS,M
N24
859

உ

மலர்ந்த மல்லிகை
கவர்ந்த துள்ளம்.

(Acrostic at both ends).

மலர்ந்த மல்லிகை—மிக அருமையான நவீனம். சக
லரும் வாசித்தல் அதிக அவசியம். எவரும் அகமகிழ்வ
ர். மல்லிகையின் மதியின் நுட்பமும், வீரமும் மலர்
ந்தசொற்களும், தமிழபிமானமும் ஊக்கமும் இசைந்
தபார்வையும்—குரு, தாய் தந்தை, மூதாதையர், த
மர், புருடப் பற்றும், ஞானியர்க் கமுதளித்தலும் து
ல்லிய வேதகீதப் பயிற்சியும், கண்டு களிப்பார்கள்,
லிகித மெழுதுந்திறன் முதலிய விடய மடங்கியுள.
கைவினைகாவா மலர் மல்லிகையை வாழ்த்துவாம்.

சாந்தோப தேச மஞ்சரி.

(ஓர் அருமையான ஞான நூல்.)

பன்னிரு திருமுறைத்திரட்டும், தாயுமானவர் இரா மலிங்க சுவாமிகள் முதலிய பாடற்றிரட்டு.

விலை. 1—4—0+0—4—0 தபால்.

வி. சே. ஆறுமுக முதலியார்,

நால்வர் பவனம்,

பெங்களூர்த்தண்டு.

உ

ஸ்ரீமார்க்கசகாயம்.

மலர்ந்த மல்லிகை.

அல்லது.

மனைவியின் மதி

Blossom Jasmine

OR

Wife's Wit

7 -NOV 1924

(First Edition 1000)

BY

V. S. Arumuga Mudaliyar,
Author of Shanthopadesa Manjari,
True Love &c.

PRINTED & PUBLISHED BY

BRIGHT & Co., BANGALORE

Copy Right Registered.

PRICE விலை } 0-13-0 POSTAGE EXTRA தபால் வேறு. } 0-3-0

1924.

உ

மலர்ந்த மல்லிகை

அல்லது

மனைவியின் மதி.

7 - NOV 1924

Blossom Jasmine

OR

Wife's Wit.

இவ்வரிய நவீனம்,
பெண்கல்வி யபிமானத்தால்,
சென்னை திருவல்லிக்கேணி, அரசாங்கத்துப்
பெண்கள் கலாசாலை போதகாசிரியர்,

சகோதரி ஸ்ரீமதி
R. S. சுப்புலக்ஷ்மி அம்மாள், B. A., L. T.,
அவர்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

தாயினு மினியநின்னைச் சரணென வடைந்த நாயேன்
பேயினுங் கடையனாகிப் பிதற்றுதல் செய்த னன்றோ
தீயிடை மெழுகாய்நொந்தேன் றெளிவிலேன் வீணேகாலம்
போயின தாற்றுகில்லேன் பூரணானந்த வாழ்வே.

வி. சே. ஆறுமுக முதலியார்,

நால்வர் பவனம், }
பெங்களூர்த் தண்டு. }

16—8—1924.

O-13MAM5,M
N24

85933

உ

மலர்ந்த மல்லிகை

Blossom Jasmine.

விடய விவரம். பக்கம்.

1.	காதலர் காட்சி.	....	1
2.	மைசூர்ச் சிவகங்கை.	....	2
3.	பரஸ்பர பூர்வோத்திரம்.	....	5
4.	காதலர் கலவி.	....	12
5.	திருவாரூர்த் தியாகேசர் தூது.	....	19
6.	ஏழைமையி னிரங்கல்.	....	24
7	கண்ணோ பிணையோ புலியோ.	....	32
8.	அடிசில் வடித்தாள் வடிவழகி.	....	37
9.	நிராசையின்றேல் தெய்வமுண்டோ.	....	42
10.	வயோதிகனே வலியவன்.	....	55
11.	ஆனைவளர்த்தாள் ஆனந்தவல்லி.	....	63
12.	மைசூர் மயினுவதி.	....	74
13.	கொலையோ வலையோ.	....	83
14.	மனைவியின் மதி.	....	98
15.	தன்வினை தன்னைச்சுடும்.	....	105
16.	மண முரசு. திருமணம்	....	112

மல்லிகை மகள்—மதும்ரவஸ்வரி என்னும் நாவல்
அச்சிலிருக்கிறது.

கதாநாயகியின் மக்கள் அறுவருடைய பெயர்களின் முதலெபூத்துக்கள் சேர்ந்தது,—மதுரேஸ்வரி

உ

திருச்சிற்றம்பலம்.

தாயுமானவர் மலை.



மட்டுவார் குழலாளொடு மால்விடை
யிட்டமாவு கந்தேறு மிறைவனார்
கட்டு நீத்தவர்க் கின்னருளேசெயுஞ்
சிட்டர் போலுஞ் சிராப்பள்ளிச் செல்வரே.

வள்ளி தேவானை சமேத ஸ்ரீ செந்திலாண்டவருக்குச் சோட சோபசார மகாதீபாரதனைகள் நடந்தன.

96-வது பக்கம் பார்க்க.

7 NOV 1924



தனது அம்சவேணி என்னும் குதிரை கழுத்தின் மீது சாய்ந்த வண்ணம் கூந்தல் ஈரமாயிருந்தமையால் சடையை விரித்துக் கோதிக்கொண்டிருந்தாள் மல்லிகை.

65-வது பக்கம் பார்க்க.

உ

1924

ஸ்ரீ மார்க்கசகாயம்.

மலர்ந்த மல்லிகை.

அல்லது

மனைவியின் மதி

அற்புதக் கணபதி யமல போற்றியே
தற்பர சண்முக சாமி போற்றியே
சிற்பர சிவமகா தேவ போற்றியே
பொற்பமர் கௌரிநிற் போற்றி போற்றியே

1. காதலர் காட்சி.

மலர்ந்த மல்லிகை! ஆம்! என் மனத் தமர்ந்த மல்லிகையேயவள். யான் கேள்விப்பட்டது போலவே- அவள் பெயருக்கிசைந்தவாறாகவே, இம் மலைமீது; செயற் கை மல்லிகை நந்தனவன மில்லாதிருந்தும், அவள் அங்கு காணும் கோயிலுக்குப்போனபோது, மல்லிகை நறுமணம் வீசியதல்லவா! திருவிளையாடற் புராணத்துள் தருமிக்குப் பொற்கிழியளித்த படலத்தில் நக்கீரரோடு வாதிக்கும் போது திருக்களாத்தி ஸ்ரீ ஞானப்பூங்கோதையார் கூந்த லுக்கும் இயற்கை மணமில்லையோவென ஸ்ரீ மீனாட்சிசுந்

தரோசர் கேட்டது போலிருக்கிறது. ஆம் சந்தேகமே யில்லை. இவள் மீது இயற்கை மல்லிகை மணம் கமழ்கின்றது. நல்லது, இவ்வழகியாள் பெயரைச்சொல்லிக்கூப்பிட்டுப் பிரியமாகப் பேசிக்கொண்டிருந்த இவ்வந்நியரையே, இவளது சவிஸ்தாரமும், இந்த க்ஷேத்திரத்தின் விசேடமுங் கேட்டறிவோமென்று சென்னை பச்சயப்பர் உயர்தரக் கலாசாலையில் பி. ஏ. பரீட்சையில் தேறி "மூர்த்திதலந்தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர் வார்த்தை சொல சற்குருவும் வாய்க்கும் பராபரமே" என்கிற அமுத வாக்கின் படிக்குத்தலயாத்திரை வரன்முறையாகச் செய்து வருகிற மருதவாண முதலியார் என்பார் சற்று நிதானித்துப் பிறகு அவ்வண்ணமே கேட்பாராயினர். அதற்கவ்வன்னியர் அப்பா! இப் பெண்ணின் சவிஸ்தாரம் சொல்லுமுன்பு இந்தப் புண்ணியதீர்த்தமும் தலவிசேடமும் சொன்னலன்றி அந்நல்லாளின் சரித்திரந் தெரிந்து கொள்ள வியலாது. ஆகவே நீ கேட்டபடி அப் பெண்ணின் சரிதை முதலில் சொல்லாமல் இம் மண்ணின் சரிதை முதலில் சொல்லுகிறேன் கேள் என்று ஆரம்பித்தார்.

2. மைசூர்-சிவகங்கை.

இந்த க்ஷேத்திரம் சிவகங்கை என்னும் திருநாமமுடையது. லோகமாதாவாகிய பார்வதி தேவியார் துஷ்டநிக்கிரக சிஷ்ட பரிபாலனம் பண்ணும் நிமித்தம் ஸ்ரீ சாமுண்டீசுவரி திருவவதாரத்தில், துளுவநாட்டில் மிகவும் துன்பம் விளைத்து வந்த மகிஷாசுரன் என்னும் அசுரனை தமது அபாரசக்தியினுல் சம்ஹாரம் செய்தார். அக்காரணத்தால் தான் "மகிஷாசுரபுரம்" என முதலில் பெயர்

பெற்றுப்பிறகு மைசூர் என மருவி வழங்குகிறது. இவ்வழகு பொருந்திய ராஜ்ஜியத்தில் எட்டு ஜில்லாக்கள் உள்ளன. அவை பெங்களூர்-கோலார்-தும்கூர்-மைசூர்-ஹாசன் ஷிமோகா-கடூர்-சித்தல்துருக்கம் என்பன. இவை ஒவ்வொன்றிலும் உள்ள பல அரிய காட்சிகள், தேவாலயங்கள் முதலிய விசேடங்கள் யாவரும் தெரிந்து கொள்ளவேண்டியதே. நிற்க.

பெங்களூரிலிருந்து புனவிற்குப் போகும் ரயில் மார்க்கம் 30-வது மைல் ஸ்டேஷனாகிய நிடவந்தா என்னுமிடத்தில் இறங்கி ஆறு மைல் ரஸ்தாவழியாக வந்தால் மேற்கூறிய சிவகங்கை என்கிற இந்த திவ்வியமான பர்வத க்ஷேத்திரம். இந்த மலை, திருவண்ணாமலை யவ்வளவு உயரமுள்ளது. இதன் ஓர்பக்கம், ஸ்ரீ சாமுண்டீஸ்வரி, மகிஷாசுரனைச்சம்மரித்ததினல் உண்டாகிய தாகவேட்கை தீர்த்துக்கொள்ளும் பொருட்டு, தனது கட்கத்தை மலைமேல் வீசவும் அம்மலை இரு பிளவு பட்டு பூமி மட்டத்திற்கும் ஆழமாகச் சிறிய சுனைத்தீர்த்தம் ஆகியிருக்கிறது.

அது தான் அதோ சிவகங்கை. பாதாள தீர்த்தமெனப்பெயர். இனி மலையின் இன்னொரு பக்கத்தில் ஒரு பெரிய குகையில் ஸ்ரீகங்காதரேஸ்வராது மகாலிங்கம்--ஸ்ரீ சாமுண்டீஸ்வரியினல் ஸ்தாபித்துப் பூசிக்கப்பட்டிருக்கிறது. அழகிய கோயிலாகக் கட்டப்பட்டிருக்கிறது. அதோ தெரிகிறதே அந்தச் சிகரந்தான் கோயில். இது மலையின் உச்சிக்கு மூன்றில் ஒரு பங்கு உயரத்திலிருக்கிறது. மலை உச்சிவரையில் ஆங்காங்கு நந்தி யெம்பெருமானுர் உருவத்தோடு கூடிய மண்டபங்கள் வெள்ளை யடிக்கப்பட்டுப் பிர

காசமாய்க்காணலாம். மலை உச்சிவரையில் ஏறுவது சில வருடங்களுக்கு முன்பு மிகவும் அசாத்தியமாகவே யிருந்தது. இப்போதிய மகாராஜா உயர்திரு கிருஷ்ணராஜ உடையார் பகதூர் அவர்களது அருந்தவப் பக்தியினால், யாத்ரீகர்கள் வசதிக்காக மிகவும் அபாயகாரமான-சாய்வான பாகத்தில் இரும்புக்கம்பிகள் பிடிப்புக்காக நாட்டியிருக்கின்றார். இந்த சரிவுள்ள பாகத்திற்குத் தொடை நடுக்கும் பாறை யென்று பெயர். இது கடந்து உச்சியில், விநாயகர்-மகாலிங்கம்-வீரபத்திரர் ஆகியவர்களுடைய கோயில்களும், இவைகளின் பக்கத்தில் இரண்டு கல் ஸ்தம்பங்கள் நாட்டப்பட்டிருக்கின்றன. இந்தக் கம்பங்கள் நாட்டியிருக்கும் மலை உச்சியின் அடிப்பாகம், நாகசர்ப்பத்தின் படத்தைப்போல் வளைவுடன் பூமிக்குச் சம்பந்தப்படாமலிருந்தும், அங்கு, அதாவது அந்தக் கல்கம்பங்கள் அடியில் தீர்த்தம் சுரந்துகொண்டேயிருக்கும். தைப்பொங்கல் அன்று அதாவது சங்கராந்தி தினத்தன்று அதிக தீர்த்தம் சுரந்து கொண்டேயிருக்கும். அதுவே சுவாமிக்குத் திருமஞ்சனமாகிய பிறகு தீர்த்தப்பிரசாதம் மகாராஜாவுக்கும் அனுப்பப்படுகின்றது.

இந்த சிவகங்கை மலையானது கிழக்கே யிருந்து பார்த்தால் விநாயகர் திருவுருவம் போலவும், தெற்கே நந்தியாகவும்' மேற்கே நாகசர்ப்பம் படம் போலவும், வடக்கே யிருந்து பார்த்தால் மகாலிங்காகாரமாகவும் அரிய காட்சி தருகின்றது. நீ கிரிபிரதட்க்ஷணம் பண்ணும் போது கவனிக்கலாம். இம் மலையின் அடிவாரத்தில் நூற்றெட்டு சிவலிங்கங்கள் பிரதிஷ்டையாயிருக்கின்றன. ஜெகத்குரு ருசிங்



மைசூர்ச்-சிவகங்கை.

அதோ (வலது பக்கம் வெள்ளையாய்த்) தெரிகிறதே அந்தச் சிகரந்தான் கோயில்.

3-வது பக்கம் பார்க்க.

கேரி ஸ்ரீமத் சங்காசாரிய சுவாமிகளின் சிஷ்யர்களுள் ஒருவர் இந்த க்ஷேத்திரத்தில் மடாதிபதியாயிருக்கிறார்.

அதோ தெற்கே தெரிகிறதே அது தான் சிவகங்கை சுவாமிகள் மடம் எனப்பெயருள்ளது. அங்கு பிராமணச் சிறுவர்களுக்கு வேத பாடசாலையும் அன்ன விடுதியும் வசதிகள் செய்யப்பட்டிருக்கிறது. இம் மடத்தில் வெகு அழகான வேலைப்பாடுள்ள வெள்ளைக் கல்லினால் பதும பீடத்தின் மேல் ஸ்ரீ சாரதாம்பாள் திருவுருவம் அமைக்கப்பட்டு ஆலயம் கண்ணைக்கவரும் நிலமையில் இருக்கிறதைப்பார்க்கலாம். இவ்வளவு அரிய பெரிய மகத்துவங்களடங்கிய இந்த க்ஷேத்திரத்தில்சுமார் ஒரு வருடமாக இந்தப் பெண் மல்லிகை தனது தாயும் பாட்டி பாட்டனுடனும் வசித்துப் பெருமானைக் காலையிலுமாலையுந் தொழுது வருகிறாள்.

3. பரஸ்பர பூர்வோத்தரம்

அப்பா இனி இவ்வுத்தமியின் சவிஸ்தாரம் அறிய விரும்பும் உனக்கு அதைச் சொல்லுவதாக முதலில் ஒத்துக்கொண்டேன் ஆதலால், அதை மறுக்கமாட்டேனென்கிற நம்பிக்கை உனக்கிருப்பதாகவே நான் மதிக்கிறேன். அதைச்சொல்லுமுன்பு வாலாறு எதுந்தெரியாத ஒரு புதியவனிடம் பெண் பேச்சுப் பேசுதல் முறையாகாது என்பதை யௌவனங்கழிந்து என்னைப்போன்ற முதுமைப் பருவமடையும் போது நீமட்டுமல்ல எவருமே ஒத்துக் கொள்ளுவார்களென்னும் உலக அனுபவத்தினை முன்னதாகவே உனக்கு இப்போது தெரிவிக்கிறேன் நீ. சற்று

நிதானமாக யோசித்து யான் கேட்கும் சிலகேள்விகளுக்கு விடையளிப்பாயாக. பார்த்தால் பரதேசிபோலும், கவனித்தால் கண்ணிய முடைய ஓர் கனவானைப்போலும், உற்றுப்பார்த்தால் உத்தம சீலனைப்போலவும் உள்ள—நீ, யார், நின்பேரெது, நின்னூரெது, நின்னிலையெது, நின்றாயார் நின்றந்தை யெவர், குலமெது?—இவைகளை முதலில் தெரிந்துகொள்ள மனம் ஏவுகின்றது. தமிழறியாத இந்நாட்டில்செந்தமிழ்ப் பேசும் அருமையப்பா, தெரிவிக்கக் கூடாத சந்தர்ப்பம் அல்லது வைராக்கியம்யாதும் உனக்கு இல்லாதிருக்குமானால் உன்னைப்பற்றிய விஷயம் சுருக்கமாய்ச் சொல்லும்படி விரும்புகிறேன் என்றார் அப்பெரியவர்.

அருமையப்பா வெனப்பரிவுடன் அழைத்த அன்பு மிகுந்தபெரியோரே! திருவாரூர்த்தியாகேசர் சந்நிதியில் ஸ்ரீமத் சுந்தரமூர்த்தி சுவாமிகளது மனதைக்கவர்ந்த பரவை நாச்சியார் போலவே, மீண்டும் இவ்வரிய நடையென்றால் குணவதியுடைய வசவேற்கும் மலர்ந்த பார்வை என் உள்ளத்தில் ஊடுருவிச் சென்ற தென்பதை உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசாமல் தங்கள் சமூகத்திற்குச் சமர்ப்பிக்கின்றேன். எனது பெயர் மருதவாணன். எனதுதாய் தந்தையர்கள் தெரியாத அனாதையேயாயினும், சிகந்தராபாதில் ஸ்ரீமான் இராவு பகதூர் பத்மாறுவ் முதலியார் ஸ்ரீமான் ஸ்ரீனிவாச முதலியார் அவர்களாலும் இராய வேலூரில் ஸ்ரீமான் மாசிலாமணி முதலியார் அவர்களாலும் நடத்தப்பட்டு வரும் துளுவ வேளாள மாணவர் சகாய நிதியின் பேருதவியினாலும் சென்னை பச்சையப்பர் உயர்தாக் கலாசாலையில் இலவச

மாய்ப் படித்துப்படிப்படியாக உயர்ந்து பீ. ஏ. பரீட்சை யில் தேறிப் பிறகு இவ்வருடமே பீ. ஈ. என்னும் இஞ்சி னீயர் பரீட்சையில் ஸ்ரீ முருகவேள் திருவருளாலும் தங் கள் முதலாய நற்கோரிக்கையுள்ளவர்கள், ஆசீர் வாதத் தினலும் தேறினேன். எனக்குப் புத்தி தெரிந்த பிறகு பிரதி விடுமுறைகளிலும் அதாவது வருடத்தில் சுமார் மூன்று மாத ஓய்வுகாலத்திலும், இயற்கை அற்புதங்க ளோடு கூடி தென்னுட்டில் விளங்குகின்ற பல அற்புதமான பாடல்பெற்ற க்ஷேத்திரங்களை தரிசித்திருக்கிறேன்.

சுகமான சீதோஷ்ணமானப்பட்டினம் பெங்களூரே என்கிற பேச்சு எங்கும் பரவி யிருத்தல் கேழ்விப்பட்டு சீவனஞ்செய்வதற்காக அங்கு வந்து சில தினங்களாகின் றன. இந்த திவ்வியமான க்ஷேத்திரம் கேழ்விப்பட்டு தரிசித்துக் போகலாமென வந்தேன். பெரியவரே இவ் வளவே யெனது சவிஸ்தாரம். இவ்விடத்திய கன்னட பாஷை தெரிந்து கொள்ள முடியாமல் கஷ்டப்பட்டேன். தமிழர்களாகிய உங்களிருவரைக்காணப் பெற்று பெரு மகிழ் வெய்தியுள்ளேன். அதிலும் ஸ்தல விசேடம் உங் களால் தெரிய மிகவும் திருப்தியுற்றேன. இனி "தங் கள் ஆக்ஞை-அடியேன்பாக்கியம்" என மொழிந்தான் மொழிவல்லோனுகிய விளையோன்.

கலைவல்லவ! நிரம்ப சந்தோஷம் பார்த்தாயா நான் நம்பியது போலவே நீ மகா பாண்டியத்துவ முடையஞ யிருந்தும், கேவலம் விரக்திகொண்டு எதுந்தெரியாதவனைப் போல நடித்தாயே. உன்னைப் போல உயர்தரப் பட்டம்

பெற்றவர்கள் இப்படித்தானுவிருக்கிறார்கள். லௌகீக நியாயங்கற்று உலகுக்குத் தக்கவாறு அபிநயஞ்செய்தல் வேண்டாமா? ஆங்கில ஞானம் அபாரமிருந்தும் தமிழ்ப் பக்தி பதிய வைத்திருக்கிறாய், சந்தோஷமே. ஆனாலும் இக் காலத்தே பண்டை ஆசார வழக்கம் கொண்டிருப்பது ஈடேறுமா வெனக்கேட்டார் அப்பெரியாராகிய கணபதி முதலியார். அதற்கு மருதப்பன் சொல்லுவானாயினன்:—

நில்லாவாழ்வு நிலை பெறுமென் றெண்ணிப்
பொல்லாவாறு செயப் புரியாதுநீர்
கல்லாரும் மதில் சூழ்தண் கருவிலிக்
கொல்லேறூர் பவன் கொட்டிட்டை சேர்மினே.

(அப்பர்)

நேற்றுளா ரின்று மாளா நின்றன ரதனைக் கண்டும்
போற்றிலேனின்னையந்தோ போக்கினேன் வீணேகால
மாற்றிலேன் கண்டானந்த வண்ணலே யளவின்மாயைச்
சேற்றிலே யின்னம் வீழ்ந்து திளைக்கவோ சிறியனேனே.

(தாயுமானர்)

என்கிற அமுத வாக்குகளின் கருத்துப் படிக்குப் பின் பற்றி நடக்க என்மனம் நாடுகின்றது. வருந்தியழைத் தாலும் வாராது வாராவென்கிற ஸ்ரீ ஔவைப்பிராட்டியா ரின் பழமொழி போலநான் அபிநயஞ் செய்தலினாலே விதித்தப்படிக்கு அதிகமாக ஒன்றுமே கிட்டாது, என் பது என்னுடையதுணிபு. தங்கட்கு வீண்சிரமம் கொடுத் தேன். நான் அவசரப்பட்டு விட்டேன். தங்கட்குச் சொல்லப்பிரிய மில்லாத விஷயத்தைக்கேட்டது மல்லாமல்

உள்ளத்தில் 22-வயதளவும் உதிக்காதுஉதித்த ஓர் அரிய உணர்ச்சியையும் அநுபவமில்லாக் குறையால் உளறிவிட்டேன். தங்கட்கும் அப்பெண்ணுக்கும் உள்ள பந்தம் ஊகித்துக்கொண்டேன். தயைபுரிந்து மன்னித்தருள்க மகிபரே! சாந்தமே ஓருருவாக்கொண்ட சாமியே! செல்கின்றேன். வந்தனம்! என்று நமஸ்கரித்து நகர்ந்தான் மங்கை மயக்கங் கொண்டிருக்கும் மருதப்பன்.

78 அல்லது 80 வயதுக்கு மதிப்பிடக்கூடிய வயோதிகரே யானலும்;—

காலை யெழுந்து கடிமலர் தூயனதாங் கொணர்ந்து
மேலையமரர் விரும்புமிடம் விரையான் மலிந்த
சோலை மணங்கமழ் சோற்றுத்துறை யுறைவார் சடைமேன்
மாலைமதிய மன்றோ வெம்பிரானுக் கழகியதே-

(அப்பர்)

என்னும் பிரமாணப்படிக்குத் தூய பழக்கமுடையவராதலால், தளர் வுறமல் வல்லிய தேகத்தினாய், தளர்ச்சியிலாச் சொல்லினராய், அன்பு கலந்த ஆசியக்காரராயிருந்தா ராதலினுலே, சற்று விளையாடக்கருதியே தவக்கம் செய்து வந்தாராலும், தாம் இதுவரையில் தேடிக் கொண்டிருந்த உத்தமன் இவ்வண்ணத்த வனுகவே இருத்தல் வேண்டுமென்னும் எண்ணம்உதிக்கவும் சிறுவனைச் செல்லவிடாது, அப்பா அர்ச்சுனத்தபசியே அவசரப் படாதே. திரும்பி வா வா! என்று பரிவுடன் அழைத்து அருகேயிருத்திக்கொண்டார். பிறகு சொல்லுகிறுர், அப்பா நான் சொன்ன சொல் தவறுதவன்.

உண்டவர்க்கன்றி உட்பசியோயுமோ
கண்டவர்க்கன்றி காதலடங்குமோ
தொண்டருக்கெளியா னென்றுதோன்றுவான்
வண்டமிழ்க்கிசை வாகமதிக்கவே.
(தாயுமானுர்.)

இப்பாட்டின் கருத்தைபுணர்ந்தவன் ஆகவே, நீ கோரியவிஷயம் தெரிந்துகொண்டாலன்றி உனது பசியோயாது. பிரஸ்தாப முக்கியமான விஷயம்? அப்பெண் யார் என்பது தானே! அதைச்சொல்லி விடுகிறேன். மேற்கொண்டு யென்னை யொன்றுமே நீ பாதிக்கமாட்டாயல்லவா வென்ருர் பெரியவர்.

ஆகட்டும் ஆசியரே! தற்போது அவ்வளவே யென்று விடையளித்தான் வித்துவ சிரோன்மணியாகிய நம்மருதப்பன். ஓகோ அப்படியா? தற்போது என்னும் பதத்தின் அர்த்தம் விளங்கியது. பெரும! ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகள் "மயங்கு புத்தி யெனு முலக வழக்காளி" யென்று சொன்ன பாடல் உனக்கு ஞாபகமிருந்தால் அதைச்சற்று சொல்லுவாயா அப்பா! என்ருர், கோடீச்சுரராகிய கணபதி முதலியார்.

" மயங்கு புத்தியெனு முலக வழக்காளிப்பயலே வழிதுறை யீதென்றறியாய் வகை சிறிது மறியாய், உயங்கி விசாரித்திடவே யோடுகின்ரு புணருமுளவறியாய் வீணுழைப்பிங்குழைப் பதிலென்பயனோ, வயங்கு மன மடங்கிய வாறடங்குகநீ யிலையேல் மடித்திடுவேன் கணத்திலுனை வாய்மையிது கண்டாய், இயங்க யென்னையறியாயோ

யாரென வெண்ணிணையோ வெல்லாஞ்செய் வல்லவனுக் கினிய பிள்ளைகாணே."

என்று இனிய இசையோடு பாடினன் பாவலன். பக்தி பரவசப்பட்டுக் கேட்டுக்கொண்டிருந்த பெரியவர் அப்பா மருதப்பா, பார்த்தாயா. "உயங்கி வருந்தி விசாரித்திடவே யோடுகின்ருய் உணரும் உளவறியாய்," என்றல்லவா பணித்திருக்கிருர் சுவாமிகள்! ஆகவே நீ அவசரப்படலாகாது. நீ பாடிய பாட்டின் இறுதி வரியின் படிக்கு உன்னை இனிய பிள்ளை யென்றே மதிக்கின்றேன் உன்னை இருத்திக்கொள்ள எண்ணுகிறேன். நிற்க,

எங்கள் பந்துத்வம் நீ யூகித்துக்கொண்டதாயல்லவோ சொன்னுய். அப்படிக்கிருந்தாலும் நீ என் கதையைக் கேழ்க்க விரும்பினுயில்லை. இருந்தாலும் அந்தப் பழைய கதைகளை யின்னெரு சமயம், அதுவும் சமீபத்திலேயே சொல்லுவேன்.

நீயோ பசித்திருக்கிருய். பசி வந்திடப் பத்தும் பறந்து போம் என்றல்லவா ஔவைப்பாட்டியும் சொன்னுர். ஆனல் அந்தப்பசி உன்னை வருத்தவேயில்லை யென்பதைச்செவ் வனே தெளிந்தேன். சிராளனை உண்ண வந்த, பைரவரைப் போல நீயுமோர் நாப்பசுவைத்தான் நத்துகிருய். எல்லாம் நமையாளும் நம்பன் செயல் நடக்கிறபடி நடக்கட்டும்.

அப்பெண்ணின் சவிஸ்தாரமே சஞ்சீவியாயிருக்கிறது உனக்கு. ஆம்! அக்கன்னிப்பெண்ணின் பெயர் மல்லிகை. அவள் எனது ஒரே பேத்தி-அதுவும், எனது ஒரே மகள் ஆனந்தவல்லியின் அருந்தவப் புதல்வி. எனது உடல்

பொருள் ஆவி, மூன்றையும் கொள்ளை கொண்ட கோகிலாக் கோமளம் கோகிலத் தொனியாள். அதோ பாடிக்கொண் டேவருகிருள் பார். இனி நாம் வீட்டுக்குப் போவோம் வா. உணவருந்தி பிறவிடயம் பிந்தி பேசலாம் என்று சொல் லிக்கொண்டிருக்கும்போது:—

4. காதலர் கலவி.

குனித்தபுருவமுங்கொவ்வைச்செவ்வாயிற்குமிண்சிரிப்பும்
பனித்தசடையும் பவளம்போன் மேனிப்பால்வெண்ணீறும்
இனித்தமுடையவெடுத்தபொற்பாதமுங்காணப்பெற்ருல்
மனித்தப்பிறவியும் வேண்டுவதேயிந்த மாநிலத்தே!

என்கிற தேவாரம் தேனினும் இனிய இரசச் சுவை யோடு கூடிய அமுதச்சொற்கள், அம்ஸத்தொனி போல் சப்திக்கச் சமீபித்தாள்.

உடனே சாய்ந்து, பின் தங்கி, தாதா! என்னவநீ தம்!! யார் அது! உங்கள் பின்னே கீழே விழுந்து கிடப் பது! என்று பெருமூச்சு கொண்டு தம்பித்து நின்ருள். அது வரையில் அருந்தவப்பேத்தி வந்துகொண்டிருந் ததை பார்த்த வண்ணமாய் மருதப்பனோடு பேசிக்கொண் டிருந்தபோது, மருதப்பன் மல்லிகை வருதலை நேர் கொண்டுபாதாதிகேசம் வரையில் பார்த்ததும் வேடன்கை மடமான் போல் மனம் வெருண்டு புத்தி கலங்கி ஏற் கனவே பசியோடு திறனற்றிருந்த நிலமையில் நிலத்தில் விழாமல் வேறென்தான் செய்யக்கூடும்? வீரலட்சுமி யாம் மல்லிகையின் முக காந்தியின் வொளி-மின்னலைப்

போல மருதப்பன் கண்களைக் கூசச்செய்தது! அப்படியே அயர்ந்து அமர்ந்தான் அதிதி.

மல்லிகை சொன்னதும் பெரியவர் உடனே திரும்பிப் பார்த்து மருதப்பனைத்தடவி கொடுத்து எழுப்பினர். "மருதனும்-மல்லிகையும்,"-மலர்ந்த பார்வையினல் சம்பாஷித்துக் களித்தார்கள். பிறகு, பெரியவர் ஆரப்பா ஆள் அங்கே யென்று கூவவும் கூடினர்கள் வேணபேர்கள் வேடர் கூட்டம் போலவே! இப்பிள்ளையைப்பக்குவமாக யெழுப்பி விடுதிக்கு அழைத்துவாருங்கள் என்று பணித்தார். மல்லிகையும் அப்போது அந்த ஆள்களுள், தனது குழந்தைப்பருவத்தில் ஆற்றில் தான் தவறி விழுந்தபோது கரையேற்றிக் காப்பாற்றிய வயோதிகனுகிய வரதராஜன் என்னும் தனது ஆப்தச்சேவகனிடம், பாட்டா! பத்திரமாயழைத்துவா என்று வற்புறுத்திச்சொல்லி தனது தாதாவோடு, வழக்கம் போல தனது இல்லமாகிய ஸ்கந்த பவனத்திற்குப் போய்க்கொண்டிருந்தாள்.

பெரியவர் முன்னும் பேத்தி பின்னுமாகத் தனது சேடியுடன் போய்க்கொண்டிருக்கும்போது, அப்பேடன்னம் நடக்க முடியாமல் கால் பின்னிப்பின்னிச்சோர்வடைந்து இருந்தமையால் கூடவிருந்த அவள் தாதி, தவனும்பாள், எஜமானரே, குழந்தை சோகமாயிருக்கிறுள். தாகத்துக்குத்தீர்த்தம் கொஞ்சம் வரவழையுங்கள் என்றுள். அதற்குப்பெரியவர்,-தாகமில்லே மோகந்தான்-மோசமில்லே. அழைத்துவா-வெய்யலேறுவதற்கு முன்னம் சீக்கிரம் வீடு போய்ச்சேருவோம் என்று விரைவாக நடக்கலாயினர்.

இவர்கள் வீடு சேர்ந்ததும் மல்லிகை தனது வேறுபட்டிருக்கும் நிலைமையை தனது தாதா கண்டுகொண்டார் என்கிற உணர்ச்சி உண்டாகியதும், நினைந்து நினைந்து. உணர்ந்து உணர்ந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து, அன்பே நிறைந்து நிறைந்து ஊற்றெழுங்கண்ணீர தனுவுடம்பு நனைந்து தளர்வுற்றனள். "மனந் தடுமாறேல்" என்றல்லவா ஒளவையார் நூலில் கற்றேன் என்பதை ஞாபகப்படுத்திக் கொண்டு-தனது மாறுபாடால் உண்டாகிய கோலத்தினைச் சரி செய்துக்கொண்டு தனது தந்தையினது வேசிகமனப் பிரிவினால் பிறவினைகள் ஒன்றுமே கவனியாது படுத்த படுக்கையாய் மெலிந்து கிடக்கும் தனது அன்னையின் அருகே வழக்கம்போல் போயமர்ந்து, *அக்கா! கொஞ்சம் சாப்பிடுங்கள் என்று மிகவும் பரிவுடன் உபசரித்து ஊட்டினாள்.

அதன் பிறகு தனக்குச் சாப்பாடு கொண்டுவரும்படிச் சேடிக்குச் சொல்லித் தனது மேன்மாடியிலுள்ள சயனவறைக்குப்போய்ச் சன்னல் அருகேயுள்ள ஒரு மெல்லிய இலவம்பஞ்சு சோபாவின்மேல் அமர்ந்து. ஆகாயத்தை அண்ணாந்து பார்த்த வண்ணமாய், பித்தேறிப் பிதற்றிக்கொண்டிருந்தாள். சேடி கொணர்ந்த உணவும் உண்டிலள்.

அப்போதோர் அழகிய அடாணா ராகம் அரற்றிக்கொண்டு, ஓர் அன்றில் பட்சி, அண்டையில் ஓங்கி வளர்ந்து சாய்ந்திருந்த அரசக்கிளையில் அமர்ந்தது. அன்னம் அந்நாளில் தமயந்திக்குத் தூது சென்றது உடனே ஞாபகத்துக்கு வரவும், அம்மேயப்பா யென்றழுது ஞானங்குழை

*அன்னையை அக்காவென்பது நவீன உலக வழக்கம்

த்த பால் உண்டவராகிய ஆளுடைய பிள்ளை அருளிய பாமாலை பாடினுள்.

வண்டாரங்கப்புனற்கமலமதுமாந்திப்பெடையினெடு
ஒண்டாரங்கயிசைபாடு மளியரசே வொளிமதியத்
துண்டாரங்கப்பூண்மார்பர் திருத்தோணி புரத்துறையும்
பண்டரங்கர்க்கென்னிலைமைபரிந்தொருகாற் பகராயே.

அருகே நின்றுகொண்டு இவள் செயலை அறிந்த சேடியானவள் தனது அருந்தலைவியின் கலவியைத்தணிக்கக் கருதி,—காலங்கடக்கிறது, குழந்தாய்! உணவருந்தி சற்று நித்திரை கொள் என்ருள். உனது அருமைத்தாயும் உன்னை உண்டு சற்று படுத்துறங்கச் சொன்னுர்கள் என்ருள்.

தவணு! அதிருக்கட்டும். அவர் வந்தாரா? உணவு அருந்திஞரா? பெரியவர் உபசரித்தாரா? என்று வினவவும் சேடியானவள், அவ்வடி வழகன் வாராதிருந்தும், இவளைச் சாப்பிடச்செய்யும் பொருட்டு, எல்லாம் சரிவர உனது அன்புமிகுந்த பாட்டனாலும், உனது ஆப்தக் கிழவன் வரதராசுவினுலும் கவனிக்கப்பட்டு வருகிறது. உன்னெண்ணம் உத்தமமானது. ஈடேறும்! சஞ்சலமேயில்லை—என்று இவ்விதமாக அளவுகடந்து உற்சாகப் படுத்தி உண்பித்து உறங்கவைத்துப் பிறவேலைகளைக்கவனிப்பதற்காகக் கதவை மூடிவிட்டு வெளியே சென்ருள்.

வெய்யலின் வெப்பத்திஞலும், தனது வேட்கையின் வேகத்திஞலும் அரசிகளின் பஞ்சணைபோல் அவ்வளவு மிருதுவாக விருக்கும் தனது படுக்கைமேல் சற்று நேரமுர

பொருந்தச்சகியாதவளாகி அங்குமிங்குமாக அறையினுள்ளேயே அலைந்து அலைந்து கடைசியாக வெறுந்தரையில், மின்சார விசிறி வாயு வீசவும், அயர்ந்து துயின்றாள். இவள் பாட்டனாரால் அனாதைப் பிள்ளைகளுக்கு கைத்தொழிற்சாலையும், ஏழைக்குடிகளுக்குச் சீவனார்த்தமாக அரிசியியந்திரச்சாலையும் இவர்களது மாளிகைக்குச்சுமார் ஒரு மைலுக் கப்பால் அமைக்கப்பட்டிருக்கின்றன. வேலையாட்கள் வேலைக்கு வருவதற்கும் இடைவேளை போஜனத்திற்குப்போய் திரும்புவதற்கும், மீண்டும் மாலை 6-மணிக்குச் சாலைகள் மூடப்படும்போது, ஊத்த விசில்--(Whistle) சத்தம் உண்டு பண்ணுவார்கள். அது அன்று மாலை இயந்திரம் கெட்டுப்போயிருந்தமையால் அதை பழுது பார்த்து 2—3 தகுதி சப்தம் உண்டாக்கினார்கள்.

அப்போது, வழக்கத்துக்கு முன்னாகவே அதாவது சுமார் $5\frac{3}{4}$ மணிக்கு என்றுமில்லாத அவ்வளவு பிரமாதமான சப்தமாக யியந்தர சாலையின் கருவி கூவியது. திடீரென விழித்தெழுந்தாள் மல்லிகை. மணியைக்கவனித்தாள். ஆறு அடிக்கும் சமயமாயிருந்தது. இன்னும் தான் உடையணிந்து அலங்காரம் செய்துக்கொள்ள குறைந்தது கால் மணியாகும். மல்லிகை மற்றப்பெண்டீரைப்போலக் காலதாமதஞ் செய்பவளல்ல. மிகவும் சுறு சுறுப்புள்ளவள். இந்து சனாதன தர்மங்களைக் கைவிடாமல் அநுசரிப்பவளானாலும் ஆங்கிலக் கல்வி பயின்று ஆங்கிலேயரைப் போல குறித்த காலங்கடந்து யாருந்தனக்காகக் காத்திருக்கும் படிக்குச் செய்யாதவள் அன்று மயங்கலானாள் மல்லிகை.

ஏனெனில் தனது தாதாவுடன் தினம் பிரதி தினம் சரியாய் 6-மணிக்கு மோடார் ரதத்தில், வெளியுலாவி

சுமார் 7-மணிக்குள்ளாகத்திரும்பி தீபாலங்காரங்களுடன் திவ்யோன்யமாய் விளங்கும் கோயிலுக்குப்போய் பணிந்து வரும் இயல்பினள். இதுவரையில் இவ்வித எண்ணங்கள் கனவிலும் நினையாதவள். ஆங்கிலத்தில் இண்டர் மீடியேட் பரீட்சை முதல் வகுப்பில் தேறியவள். மலர்ந்த பருவமடைந்திருந்தாள். பரிபக்குவமுள்ள சீடனுக்குக் குருதரிசனம் கிட்டும்போது எப்படி ஞானம் தானகவே தோன்றுத்துணையாக விருந்து உதவுமோ அது போலவே மருதப்பன் முகதரிசனம், மல்லிகையை மலரச்செய்தது. இவ்வியற்கைமாறுதல் அவளை அலரச்செய்தது. இன்று தாதா உடன், கூடப்போக வியலாததற்கு வருந்தினள். இதற்குள்ளாகத்தாதாவும் உள்நுழைந்து மல்லிகா மாலைபோது ஆச்சுதே உலாவப் போக வரவில்லையா வென்று இவள் நோக்கத்தை இவள் கோலத்தினல் உணர்ந்திருந்தாராணுலும்,எது மறியாதவரைப் போல் ஏவினர்.

தாதா! தங்கள் சௌகரியத்திற்கு இன்று யான் உடன் வராமைக்கு, மிகவும் வருந்துகின்றேன். பல்லிமேல் விழுந்தது அதனல் ஸ்னனம் செய்யப்போகிறேன். இன்று ஞாயிற்றுக்கிழமை யாச்சுதே-சீக்கிரம் மாலைதெரிசனத்திற்காகக் கோயிலுக்குப்போய் வந்து வேலைகளை முடித்துக் கொண்டால் நாளை அதிகாலையில் எழுந்து, தயாராகி, சோமவார சேவைக்குச் செல்ல அநுகூலமாயிருக்கும்.

புதியவர் வந்தாரே! அவரை கூட அழைத்துப்போகலாமல்லவா தயவு செய்து இன்றுமட்டும் என்னை மன்னிப்பீர்களென்று பிரார்த்திக்கிறேன் என்ருள் அருந்தவப் பேத்தி "புதியவர்" என்கிற புதுமையை புறக்கணித்

துப் பேசுவதாகக் காட்டிக்கொள்ளாமல், ஒகோ! பல்லியா விழுந்தது ? அதற்காக இந்நேரத்தில் (அகாலம்) எதுக்கு ஸ்னானம் செய்யவேணும்.

பல்லிமேல்வீழ்ந்ததோஷம்பறையனைத்தீண்டுதோஷம்
வல்லிமார்பணைந்ததோஷமாண்டாரைத்தொடுதோஷம்
சொல்லியதோஷமெலாம்தொண்டர்தம்பழக்கத்தாலே
தில்லைமன்றுடுமீசன்திருவெண்ணீறணியப்போமே.

என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்களே! விபூதியிட்டுக்கொண்டால் தோஷமேது. நீயே எத்தனையோ தரம் அப்படிச்செய்திருக்கிறாய் என்பது மறுக்கமாட்டாயல்லவா. ஆனாலும் உன்னிஷ்டம் போலவே செய் வற்புறுத்தமாட்டேன். பல்லி எங்கேயம்மா விழுந்தது என்று பெரியவர் பரிவாய்க்கேழ்க்கவும், மயங்கியிருக்கும் மல்லிகையும்--மார்பில் விழுந்து இடது புஜத்தில் புரண்டு கீழே போய்விட்டது என்றாள்.

மார்பிலா விழுந்தது! சரி சரி சந்தோஷம். மார்பில் விழுந்தால் தனலாபம். பிறகு இடது புஜமா! இடது புஜம்!! இது ஞாபகமில்லை—பஞ்சாங்கம் பார்க்கிறேன் என்று ஓடிப்போய் நகைத்துக்கொண்டே திரும்பிய பெரியவர்--நிரம்பசரி நீ கோரிய விஷயம் தான்! பல்லி விழுந்தால் “ புல்லிப்புணர்வதென்று சொல்லோ வென்பொல்லா மணியைப் புணர்ந்தே ” என்று ஸ்ரீ மணிவாசகப் பெருமான் சொன்ன பேரின்பச்சொல்.—வேண்டுமானால் நீ கோரிய விஷயத்திற்கு வைத்துக்கொள். எல்லாம் சுபமே! சுந்தர மூர்த்தி தந்திரம் (தூது) நீயும் கடைப்பிடியம்மா

என்று சொல்லிக்கொண்டே பெரியவர் போகும் போது, பேத்தி வழிமடக்கி என்தாதா அவரை அழைத்துப்போகிறீர்களா என்றாள். அவரையாவது தொகரையாவது அவர்தான் வரவேயில்லையே வென்று சொல்லிப்போய்விட்டார் பெரியவர்.

அப்பா! ஜெயித்தேன். ஏதேது சொன்னாலும் எள்ளளவு மிரங்காத சூதர் எனது மூதாதை. எனது பேதை மனம் பேதித்திருப்பதைச்செவ்வனே தெரிந்து கொண்டு என்னை எளனஞ் செய்கிறார் இருக்கட்டும். அவ்வடிவழகரை, அமுது அருந்த அழைத்தும்,—அன்புடன் அழைத்தும், அவர் வாராதெங்கு போனாரோ.

தாயுந்தந்தையுஞ் சற்குருநாதனு
மாயுந்தெய்வமு நீ யென்றறிந்தனன்
பாயுமால் விடையேறும் பரமனே
நீயுங்கைவிடவென்ன நினைத்தியோ?
(இராமலிங்கசுவாமி)

வென்று கதறினாள் பதறினாள் புஷ்பவனத்தில் புகுந்தாள்

---

5. திருவாரூர்த் தியாகேசர் தூது.

மகிட மரத்து ஊஞ்சலில் மகிழ்வா யமர்ந்து ஊசலாடி, எனது தாதா அருமையாகச்சொன்னபடி, திருவாரூர் பரவை நாச்சியாரிடம் தூது சென்ற தியாகேசரை தியானிப்பது தான் முறை-வேறொன்று மறியேன் என்ப

தாக எண்ணிய எந்திழை ஏக்கமுற்றுப் பாக்களை வரிசையாகப்பாடலானாள்:—

தனிநான்மறையீரொற்றி நகர்தழைக்க வாழ்வீர் தனிஞான, வொளிநாவரசை யைந்தெழுத்தாலுவரிகடத்தி னீரென்றேன், களிநாவலனை* யீரெழுத்தாற்கடலின் வீழ்த்தினேமென்றே, யெளியேற்குவப்பின் மொழிகின்றிரிதுதான் சேடி யென்னேடி.

அப்போது சேடி தவனும்பாளும் தட்சணம் அங்கு தோன்றி, மல்லிகா! மருட்சியடையாதே. வா கோவிலுக்குப்போவோம் என்றாள்.

மல்லிகை, மருண்டு மருண்டு, தனது மலர்ந்த சொற்களால் தேன் ஒழுகும் இனித்த குரலினால் திருவாரூர்ப் பாசுரங்களை, மேலும் பாடுவாளானாள்.

இலைகொள்சோலைத்தலையிருக்கும் வெண்ணுரைகாள்
அலைகொள் சூலப்படையடிகளாரூரற்குக்
கலைகொள் சோர்கின்றதும், கனவளைகழன்றது
முலைகள் பீர்கொண்டதும் மொழிய வல்லீர்களே.

வண்டுகாள் கொண்டல்காள் வார்மணற்குருகுகாள்
அண்டவாணர்தொழுமடிகளாரூரரைக்
கண்டவாறுங்காமத்தீக்கனன்றெரிந்துமெய்
யுண்டவாறும் மிவையுணர்த்த வல்லீர்களே

(சுந்தரர்)

தோழி தவனும்பாள் மல்லிகாவின் மெல்லிய கரத்தைப்பற்றிக்கொண்டு மெல்ல மெல்ல அடியெடுத்து நடப்

---

* நாவலன் சுந்தரமூர்த்தி; ஈரெழுத்து தூது.

பிக்கப் பிரயத்தினப்பட்டாள் பயன் ஏதுமில்லை. தவனு! தொடாதே போ. வெப்பம் கொப்பளித்திருக்கிறது.

" பூாகங்கொப்பளித்த மாதர் பண்ணுடன் பாடியாட
வாகங்கொப்பளித்த தோளாாதிகை வீரட்டனுரே "
(அப்பர்)

இப்படிப்பிரலாபிக்கும் பிரபாவதியின் பிரமை பிரியனைப்பற்றியது. பிரளயம் போலப் பிளிர்த்துளது* இதை பிளத்தல் பிழையே. பிரயாசப்பட்டு பிரீதியுண்டு பண்ணவேண்டும் என்று தனக்குள் ஏற்பாடுகளைத்தயாரித்துக் கொண்ட தவனு வென்னும் தாதி, தலைவியிடம் தழுவி தைரியங்கூறி—தணிகேசரைத் தியானித்தால்--தணிக்கையாகும் என்ருள்.

இதைக்கேட்ட மல்லிகை மலர்ச்சியடைந்து தவனு! தயவு செய்து சற்று உட்கார் தஞ்சமென்பார்க்குத்தயாளமளிக்கும் தணிகேசரை ஞாபகப்படுத்தினுய்! பல்கோடி வந்தனம் உந்தனுக்குத் தந்தனன். திருப்புகழ் பாடுவோம் பரிவாகவே இவ்வழகுமிகு நிலவினிலே, யென்று—இருவரும் பாடுவாரானுர்கள்:—

நிலவினி லேயிருந்து வகைமல ரேதெரிந்து
நிறைகுழல் மீதணிந்து குழைதாவும்-
நிகாறு வேலினங்கள் வரிதர வாசகங்கள்
நினைவற வேமொழிந்து மதநூலின்;

---

* பிளிர்த்தல்—கொப்பளித்தல்.

கலபம ஞேகாங்க ளளவற வேபுரிந்து
கனியித ழேயருந்தி யநுராக-
கலவியி லேமுயங்கி வனிதையர் பால் மயங்கு
கபடனே யாளவுன்ற னருள்கூராய்;
உலகமொ ரேழுமண்ட ருலகமு மீசர்தங்கு
முயர்கயி லாயமும் பொன் வரைதானும்-
உயிரொடு பூதமைந்து மொருமுத லாகினின்ற
உமையரு ளால் வளர்ந்த குமரேசா;
குலேபடு சூரனங்க மழிபட வேலெறிந்த
குமரக டோரவெங்கண் மயில்வாழ்வே-
கொடுமுடி யாய்வளர்ந்து புயனிலே போலுயர்ந்த
குருமலே மீதமர்ந்த பெருமாளே

சகியே! என்ன ஆனந்தம்!

சாறு சேர்திருத்தணிகையெந்தைநின், ஆறுமாமுகத் தழகை மொண்டுகொண், டூறில்கண்களாலுண்ண வெண்ணினே, னீறிலென்னுடையெண்ண முற்றுமோ.

இப்படி பக்தி பண்ணிப்பிறகு தனதருமைத் தாதியின் மீது சாய்ந்து கொண்டு தங்காய் தவளு! நான் அவரைச் சந்தித்தபோது நயன மொழியால் வருதற்குரியீர் வாருமென்றேன் வந்தேனென்று மறைந்தாரே. என்னமதியீனம்.! மதியூகி, “வயோதிகனே வலியவன்” எனப் பெயர் வாய்ந்த வரதராஜன், வன்கிழவனே அவன்-பத்திரமாயழைத்துவா வென்றேன். அவனுமா இன்னம் வரவில்லே. எங்கு தூங்குகிருனே கிழவன் பாவம், என்று பரிதபித்தாள் பதுமினி.

அப்போது தவஞ தலைவியை மீட்டுந்தேற்றி தேவாலய சேவைக்குப்போக நேரமாச்சுது என்று எச்சரித்தாள். எச்சரித்தால் தான் என்ன? நோக்கம் வேருயிருப்பதால் போக்கு ஏதோ சொல்லி, நிலாவெளிச்சம் இருப்பதால் பயமில்லை, கோயில் மலைமேல் இருக்கிறதென்று பயப்படுகிருயோ, வேண்டிய ஆள்களையிட்டுக்கொண்டு போகலாம் என்று உறுதி சொல்லி, தவஞ! நீ அவரை இன்று பகல் பார்த்தாயா வென்று கேட்டாள். நான் கவனிக்கவில்லை எப்படி யிருக்கிருர் சற்று சொல் கேழ்க்கிறேன் என்ருள் தாதி.

அந்தச் சமயத்தில், மல்லிகையின் ஆப்த ஆள் வரதராஜன், என்னும் கிழவன் மருதவாணனை, இவர்களுக்குத் தெரியாமல் சோலையில் ஒளித்திருந்து உற்றுக் கேட்கச் செய்தான்.

இன்னதென்றறியேன் அவரழகை-- என்னென்றுரைப்பதேந்திழையே! துள்ளிக் குதித்தது என்மனம். அவரைச்சூழ்ந்தது. இன்னும் வந்தநிலை. எள்ளிக்கனியாம் அவரழகை எழுதி முடியாது. என்னை விழுங்குமவரழகை; எல்லையில்லா அவரழகை; யார்க்கு மடங்காதவரழகை என்னுள்ளம் ஒன்றேயறியுமடி; இலகும் அவர்தந் திருவழகையெண்ண முடியாது. அவரழகைக் கண்டால் யாருமயங்கித்தலை யவிழ்ப்பர். விளத்துக் குவப்பா மவரழகை வாய்கொண்டுரைக்க வசமாமோ! மந்தாகினி வான்மதி மத்தம், மருவுஞ்சடையார்-அவர் மாசடையார். எனக்குத்தந்தார் மையலென்னே? வென் சகியே! இனி நான் சகியேனே! என்று பேசி அருகிலிருந்த அழகிய மயிலைத் தழுவி குயிலே போல் பாடுவாளாஞள்.

காலைமலர்ந்தகமலப்போற்
கவின் செய் முகத்தார் கண்ணுதலார்
சோலை மலர்ந்த ஒற்றியினார்
சோகந்தீர்க்க வந்திலரே
மாலைமலர்ந்த மைய னேய்
வசந்த மதனால் வளர்ந்த தையோ
சேலைவிழியா யென்னடி நான்
செய்வ தொன்றுந் தெரிந்திலனே.

என்று பாடிக்கொண்டே பரிதாப நிலையிலே நிலமிசை சாய்ந்தாள், பாய்ந்தேந்தினான் வரதராஜன் என்னும் ஆஜானுபானுவாகிய கிழவன், வேழத்தைக்காத்த கார்வண்ணன் போலவே! பிறகு மெதுவாய் தாதி நடத்திவர வீட்டில் கொணர்ந்து உணர்ச்சி வரச்செய்து வழக்கமாய்க் கோயிலுக்கு அழைத்துப்போய் தனது நித்யசேவையை முடிப்பித்து, இரவு $8\frac{1}{2}$-மணிக்குள்ளாக வீடு சேர்ப்பித்தான் கிழவன்.

6. ஏழைமையினிரங்கல்.

நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
றென்கடம்பைத்திருக்கரக் கோயிலான்
றன்கடன்னடியேனையுந்தாங்குத
லென்கடன் பணிசெய்து கிடப்பதே.

திருநாவுக்கரசு சுவாமிகள் "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்று மேற் கூறிய திருப்பாசுரத்தில் பணித்திருக்கிறபடிக்கு, யான் பணிசெய்து பசியாற்

றிக்கொள்வேனேயன்றி, கோடீஸ்வரர் ஸ்ரீமான் கணபதி முதலியாரும்—அவருக்குமேலான அன்போடு, அவ்வாரணங்கும் அழைத்ததால் அதற்கு இணங்கேன். அனுதையாயிருக்கிற யான் பிறப்புவளர்ப்பு வகையறியாத யான். சேவித்துச் சீவனஞ் செய்வதே முறையெனக்கொள்கை கொண்டிருக்கும் யான், முன் பின் தெரியாத ஒருவர் வீட்டில், அதிலும் லட்சாதிபதியாக விருக்கும் அவர் வீட்டில் ஒரு நாள் அல்ல, சதா இருத்திக்கொள்ள பிரியப்படுவதாகப் பெரியவர் சொன்னுரே-அதுபோல அவர்களோடு பொசித்தும் வசித்தும் இருக்க என் மனம் இசைய வில்லை.

ஆனுல் அவ்வல்லி என் மனதை கொள்ளை கொண்டாள். சென்னை முதலியவிடங்களில் எனது படிப்பையுந் தன்மையையு முணர்ந்த முதலிமார் குடும்பத்தில் பலபேர் என்னை மருமகனுகச் செய்துகொள்ள விரும்பினுர்கள் என்பது மிகையான விஷயமல்ல. பணத்திலுைம் மேனுட்டு நாகரீகத்தினை உள்ளபடியறியாமல் அவர்களைப்போல உடுத்தும், உண்டும், உலவியும் பொழுதுபோக்கும் போலிப் பெண்களைக்கண்ணுரக்காண்பதுவும்தீதே. ஆம் தீதினுந் தீதே ! இதுபற்றியன்றே "தீயாரைக்காண்பதுவும் தீதே திருவற்ற தீயார் சொற் கேட்பதுவுந்தீதே, தீயார் குணங் களுரைப்பதுவுந்தீதே, அவரோடிணங்கி யிருப்பதுவுந் தீது." என்று ஒளவைப்பிராட்டியும் சொல்லியுள்ளார். ஆகவே சுமார் 16—17 வருடங்களாக வசித்து வந்த சென்னையை விட்டு வந்தும், "வருந்தியழைத்தாலும் வாராது வாராது-பொருந்துவன போமின் என்றுல் போகாது." என்கிற முதுரைக்குச் சரியாக என்னை இங்கு கொண்டு

வந்து சேர்த்தது எனது வினை அது நல்வினையோ தீவினையோ நான் அறிகிலேன்! சுவாமி தரிசனை செய்ய வந்த யான், *வாமலோசனையின் வலையிலகப்பட்டு வசீகரிக் கப்பட்டுளேன்.

ஆஹா! முருகனே! நானோ பரம ஏழை. நான் நாடு வதோ நாட்டாண்மைப்பதவி. இவ்வூரில் அவ்வஞ்சி அரசி யேபோல் ஆட்சிபுரிகிருள். அரசியேபோல் என்ன? அம்புலியே யவள். அயன் மனைவியோ, அரிதேவியோ. அரன் உமையோ, மதன்ரதியோ. அல்லது அயிராணியோ. இல்லை இல்லை. இன்னம் கன்னிப்பெண்ணேயவள். உண் ணக்கிடைத்த கனியேயவள். தனித்தனி முக்கனிபிழிந்து வடித்து ஒன்றுகக் கூட்டிச் சற்கரையுஞ் சீனிக்கற்கண்டுந் தேனுஞ் சேர்ந்த பழனியாண்டவர் பிரசாதமேயவள்.

வருதற்குரியீர் வாருமென்று கண்ணசைத்த விண் மணி விரைந்து சென்றாள். அவளை நான் பாராதபோது-தான் என்னை அன்பொழுகப்பார்த்தாள். பார்த்துப் பார்த் துப் பரிதபித்தாள். பரஸ்பர அன்பு ஒன்றையே நினைத்து நாணித் தலைகுனிந்தாள். அந்த அருந்தவக்குறிப்பு எம்மிரு வரிடத்துந்தோன்றிய பின்னர், அவ்வுண்மையன்பாகிய பயிர்வளர-வார்த்த நீராயிற்று. அவ்வருமை நீரினுல் கொம்பில் அரும்பு ஆய், குவிமலர் ஆய், காயாகிப் பழுத் திருக்கிறது பக்குவமுள்ளகனி, அது எப்பேர்க்கொத்தது. எவர்க்கும் எட்டாதது. "கிட்டாதாயின் வெட்டன மற."

"களக்கமறப்பொது நடநான் கண்டு கொண்ட தரு ணம், கடைச்சிறியேன் உளம்பூத்துக்காய்த்ததொரு காய்

* அழகிய விழியுடையாள்.

தான்-விளக்க முறப்பழுத்திடுமோ வெம்பியுதிர்ந்திடுமோ, வெம்பாது பழுக்கினுமென்கரத்திலகப்படுமோ—கொளக் கருது மலமாயைக்குரங்கு கவர்ந்திடுமோ, குரங்கு கவராதெனது குறிப்பிலகப்படினுங்—துளக்கமறவுண்ணுவனோ தொண்டைவிக்கிக்கொளுமோ, சோதி திருவுளம் எதுவோ ஏதும் அறிந்திலனே." (இராமலிங்கசவாமி)

என்று பாடிப்பாடிப்பாகாயுருகினுன் பட்டப் பகல் வெய்யலிலே. அப்போது பகல் காலபூசையும் ஆச்சுது கோயிலும் திருக்கதவுமூடப்படும் ஐயா புதியவரே "கனியானுல் இனி தடையென்ன உண்பீர் வாரும்" நேரமாகிறது பெரியவர் என் பேரில் கோபிப்பார். சீமாட்டியும் சீறுவாள் என்முன், அதுவரையில் பின்புறம் மருதப்பன் தனக்குத்தானுகவே மேற்சொன்ன கலவிச்சொற்கள் உளறிக்கொண்டிருந்தபோது, கேட்டுக்கொண்டேயிருந்த மல்லிகையின் ஆள் வரதாராஜன் என்னும் கிழவன்.

திடுக்கிட்டான் மருதப்பனும். ஐயா பெரியவரே உன்னை அப்போதே போகச்சொன்னேனே ஏனையா போகவில்லை நீங்கள் போய் சாப்பிடலாம் இன்று ஞாயிற்றுக்கிழமை. முதன் முதல் புதிய விடத்தில் சாப்பிடக்கூடாது. எஜமானருக்குச் சொல்லும். நாளை சோமவார சேவை செய்து பிறகு சுமார் பகல் 12-மணிக்கு வருகிறேன் போம் என்முன் மருதப்பன். மருதப்பா பொறு அப்பா, சாப்பிடுவதற்குக்கூடவா நாள் நட்சத்திரம். அதவாயில்லை சம்மந்தமா செய்யப்போகிறீர்கள். யாருமறியாத இந்த ஊரில் வந்து தவிக்கிறீரேயென்று பெரிய முத

லியார் அழைத்தது மல்லாமல், பரிவுடன் அழைத்த அந்த அழகிய அம்மாவின் சொல்லையுமா மறுப்பது ?

நன்று நன்று ! வெகு நன்று ! எண்ணிய நாள் நல்ல நாள். ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழம், வெள்ளி, சனி, இரண்டு பாம்பு, இவை முதலான நாட்கள் நல்ல நல்ல அடியார்க்கு மிகவே யென்று என் அருமை யம்மா தினந்தோறும் பாடுவது பழக்கம். அதுபோல ஆண் பிள்ளையாகிய உங்களுக்கு, அதிலும் சிவனடியார், மெய்யான சிவனடியார், சிவ பூஜை பண்ணவந்து, அவ பூஜை பெரிதும் பண்ணிய பரம பக்தர், உங்களுக்கு, சூரி யன் எங்கு தோன்றினுல் என்ன ஐயா. என்னம்மை, “எங்கெழிலென் ஞாயிறு எமக்கேலோரெம்பாவாய்” என்று ஏத்துவாள் எப்போதுமே, என்ருன் வரதாாஜன்.

இவையெல்லாம் வெகு கவனமாகக்கேட்டுக்கொண்டி ருந்த மருதப்பன் ஐயா பெரியவரே உமது பெயரென்ன என்னம்மை யென்று சொன்னீரே அது யார் அப்பெண் ணையா உமக்கு அப்பெண் என்ன முறை (சொந்தம்). சற்று விவரமாகச் சொல்லுவீரா வென்ருன். ஆக்கப்பொறுத் தது ஆரப்பொறுக்கக்கூடாதா. எல்லா விவரமுந்தெரிந்து கொள்வீர். எமது பெரிய முதலியார் ஆழ்ந்த யோசனை யுள்ளவர். உமது உணர்ச்சி வாசனை உள்ளபடியறிந்து கொண்டுள்ளார்—வாரும் போகலாம்.

பிறகு அவர் ஒழுங்குபட யாவையும் நடத்துவார். நம்ப லாம் என்ருன் கிழவன். ஐயா கிழவரே. நானே அனாதை; நானுவது வரவாவது; எல்லாம் மித்தை! மயங்கித்தயங்கி

ஏதேதோ பேசிவிட்டேன். முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டது போலாகும். போமையா. நான் கோயிலுக்குப்போய் பல ஊர்பிரயாணஞ்செய்யும் நோக்கத்தோடு திரும்பிப்போய் விட்டதாகச்சொல்லிவிடும், என்றான் மருதப்பன்.

கோயிலாவது வாயிலாவது, நேரமாகியது கோயிலும் மூடிவிட்டார்கள். இனி மாலைதரிசனை தான். அனுதையா நீர். சரி சரி அப்பேர்க்கொத்த படிப்பாளி அனுதையானும் அவரைத்தான் தேடித்திரிகிறார் எமது கோடீச்சுரராகிய பெரிய முதலியார் என்று தன் எஜமானரது நிலைமையும் அவர் கொண்டுள்ள அபாரத்தருமச் செயலின் திட்டமும் (Plan) ஒருவாறு அறிந்துகொள்ளும்படி சூசனையாகக் குறிப்பித்தான். மேலும், இவ்வூரையே விலைக்கு வாங்கி அரசுபுரிகிறார்கள். இங்கு வந்தவர்கள் அவர்களைக்கண்டு அவரவர்களுக்குத்தக்கவாறு மரியாதை பெற்றுப்போனாலன்றி இவ்வெல்லையைக்கடந்து செல்ல முடியவே முடியாது. அப்பேர்க்கொத்த பரோபகாரச்சிந்தையுள்ளவர்கள்—(The Hospitality). ஆகவே அவர்கள் வீடாகிய ஸ்கந்த பவனம், வந்து வள்ளிவிலாசம் கயிலாயமே போல் காணும், அங்கு பூஜையை முடித்துப் பொசித்துச் சற்று உறங்கும். பிறகு 3-மணிக்குப் பெரியவருடன் பேசலாம் என்றான் கிழவன். அப்போது, முருகா! வெனக்கூவி பின் வருமாறு பாடலானன்.

அவநாள் கழிக்கவறிவேனலாதுனடிபேணி நிற்கவறியேன், றவனுடுமன்பரொடுசேர வந்து தணிகாசலத்தையடையே, னெவனுனெனக்குமவணீ யிருக்கும்டீ பீயிலுன்

றனடியா, ரிவனு ரிவன்ற னியல்பென்ன வென்னில் எவ னென்றுரைப்பையெனேயே.

ஐயா கிழவரே நீர் சொல்லுவதெல்லாம் தெரிந்து கொண்டேன். இப்போது நான் பாடிய பாட்டின் அர்த்தம் தெரிந்ததா உனக்கு. நான் வந்து உங்கள் அரச மாளிகையில் இருந்தால், அங்கு பல தனபதிகள் வருவார்களே ! —அவர்கள் என்னைச்சுட்டிக்காட்டி இந்த வெட்டிச் சோத்து ஆசாமி (Rice-Killer)—இவன்யார் இவன்றன் இயல் பென்ன வென்னில் உங்கள் எஜமானர் என்னை யா ரென்றுரைப்பார். அரசனேபோல் அங்கு சகல சௌகரியங்களோடு உண்டும், உடுத்தும், உலவியும், உளறிக் கொண்டும் உறங்கியும், இருந்தால், ஏழை எளியதுகள் வந்துயாசிக்கும் போது நச்சுமரமேபோல் பயன் இல்லாமல் நிற்க வேணும்.

ஞானசாரியாராகிய ஸ்ரீ மணிவாசகப் பெருமானும் இதனால் அல்லவா, தமது ஆனந்தாதீதப் பாசுரத்திலே " தாம்வளர்த்ததோர் நச்சு மாமரமாயினும் கொல்லார் " என்று சொல்லியுள்ளார். இந்தப்பாட்டின் கருத்தின் படிக்கு நீயும் அரண்மனை மற்றச்சிப்பந்திகளும் கூடப்பழகும் அன்பினால், ஒன்றும் சொல்லாவிட்டாலும், யாசகர்கள் " இரப்பவர்க்கோரணுமளவு மீயான், யென்பிறந்தான் புவிச்சுமையாயிருக்கின்றனே " யென்று ஏசார்களா ? அப்போது என் மனம் என்ன பாடுபடும் யோசித்துப்பார்.

" மருந்தறியேன் மணியறியேன் மந்திரமொன்றறியேன், மதியறியேன் விதியறியேன் வாழ்க்கைநிலையறி

யேன்—திருந்தறியேன் றிருவருளின் செயலறியேனறந் தான், செய்தறியேன் மனமடங்குத்திறத்தினிலோரிடத்தே யிருந்தறியேனறிந்தோரை யேத்திடவுமறியே, யெந்தை பிரான் மணிமன்ற மெய்தவறிவேனோ—யிருந்த திசை சொலவறியேன் எங்ஙன நான் புகுவேன், யார்க்குரைப் பேனென்ன செய்வேனேதுமறிந்திலனே."

இந்த சங்கடத்துக்கென்ன செய்வேன் என்று மயங்கினான் மருதப்பன்.

வரதராஜன் வாராமையினால் என்னநேரிட்டிருக்கும் என்று சந்தேகித்தவராய் எஜமானராகிய கணபதி முதலியார் இவர்கள் சம்பாஷித்துக்கொண்டிருந்த இடத்துக்கு நேர் பின்புறம் ஒரு மரத்தின் மறைவில் இருந்து உற்றுக் கேட்டுக்கொண்டிருந்தார். மருதப்பன் உண்மை ஊக்கத்தை உள்ளபடி உணர்ந்தார். நியாயமே என்று நிதானித்தார். அந்தச் சமயத்தில் அவருக்கு இயற்கையான இரும்மல் வரவும், உண்டான சப்தத்தினால் கிழவனும் குமாரனும் திருப்பிப்பார்த்தார்கள். உடனே கிழவனாகிய வரதராஜன் எஜமானரே மன்னியுங்கள், மருதப்பர் மறுக்கின்றார் வருகிறதற்கு, என்றான்.

அப்பா மருதவாணரே உமதிஷ்டம் போலவே நடப்பிக்கிறேன். ஐயுறேல். எனது மனதில் பல தரும வேலைகள்-சாச்சுவிதமான வேலைகள் நடத்த நன்னடக்கையுள்ள நம்மவன் தேவையென தேடிக்கொண்டிருந்த சமயம், ஸ்ரீ மார்க்க சகாயர் திருவருட்சகாயத்தால் திருச்சந்நிதி மலைமேலேயே மகிழ்வுறச்சந்தித்தோம். முன்னே யான்

உனக்குச்சொல்லியிருந்தபடி விஷயங்கள் பலஉள. அவற்றை நீ கிழவனிடம், வாக்களித்தப்படிக்கு நாளைப் பகல் சரியாய் 12-மணிக்கு ஸ்கந்தபவனத்துக்கு வா அப்பா. இன்று (ஞாயிறு) போஜனம் எம்மிடம் வேண்டாமென்று நீ கிழவனிடம் சொன்னபடிக்கு அப்படியே யாகட்டும். வரதா இவரை இன்றுமட்டும் மல்லிகை வனத்தில் உன்னுடைய வீட்டுக்கு அழைத்துப்போய்ச் சகல சௌகரியங்களும் செய்து நாளை இவர் நமது விடுதிக்கு வருமளவும் கூடவேயிருந்து எல்லா அரிய விடத்துக்கும் அழைத்துப்போய்க் காண்பித்து அழைத்துவா என்று சொல்லிப்போய்விட்டார் பெரியவராகிய கணபதி முதலியார்.

---

7. கண்ணோ பிணேயோ புலவியோ.

" கூற்றமோ கண்ணோ பிணேயோ மடவா
ளோக்கமிம் மூன்று முடைத்து." (குறள்)

பெரியவர் சொன்னபடிக்குப் புஷ்பவனத்தில் இருக்கும் தனது வீட்டில் அழைத்துப்போய், எஜமானர் புஷ்பவனத்தில் உலவி தங்குவதற்கு ஓர் சிறு மேடைமேல் கட்டப்பட்டிருக்கும் சிறு-ஆனல், அழகிய மனேயில் இருத்தி, வேண்டிய மட்டும் உபசரித்து வந்தார்கள் கிழவனும் கிழவியும். மருதனும் மனதைத்தேற்றிச்சற்று நித்திரைபுரிந்து மாலேயில் ஓர் மருதமரம் நீழலில் மைசூர் இராஜ்யத்தின் இயற்கை அற்புதக்காட்சியை நோக்கிய வண்ணம் பல வண்ணப்பாக்கள் பாடிக்கொண்டிருந்தான். இவன் இருக்கு

மிடம் எவர்க்குந் தெரியாதவளவு (Curve வழியில்), இருந்தது. இவ்வளவின் மற்றோர் புறந்தான் மல்லிகை மாலைப் போதில் வந்து ஊஞ்சலாடிக்கொண்டே வசந்த பைரவி, இராகத்தில் "நிலவினிலே" என்கிற திருப்புகழ் பாடியது. அப்போது நடந்த அவ்வளவு மழலைப்பேச்சுகள் யாவும் "செவிகாள் கேண்மின்களோ" என்னும் அப்பர் சுவாமிகள் வாக்கேபோல் அருமையாய்க் கேட்டுக்கொண்டும், எட்டி எட்டிப்பார்த்துக்கொண்டும், தன்னழகை அப்பாவை அளவு கடந்து வர்ணித்துக்கொண்டிருந்ததைக் கவனித்துப் பதைபதைத்துப் பரிதவித்திருந்தான். அப்போது தான், திடீரெனத்தோன்றிய வரதராஜன் மல்லிகையின் மூர்ச்சை தெளிவித்து அழைத்துப்போனான்.

பிறகு மருதப்பன் மல்லிகையின் வனப்பைக்கண்டு களித்து வர்ணிக்க வாரம்பித்தான். இவளைப் பார்த்துப் பேசாதிருக்கும் நிலமையினால் உண்டாகும் நோய் இவளினால் அல்லவா? இவள் என்னை வருத்துதலாலே, யமனோ, என்னை நோக்கியதாலே கண்ணோ, இயல்பாக அஞ்சுதலாலே பெண் மானோ அறியேன். இப்பெண்ணின் பார்வை இம் மூன்று தன்மைகளையும் உடைத்தாயிருக்கிறது.

எனது இந்தச் சிறுவயதில் எத்தனை எத்தனை பட்டினங்களில் எத்தனை எத்தனை எழில் வல்லிகளைப் பார்த்திருக்கிறேன். திரிகாண சுத்தியோடவே யிருந்தது யென் மனம். இன்று இந்த அமுதநாயகியைக் கண்டதும் கலவரமே கலக்குகிறது. என்செய்வேன் ஈசா. பெங்களூரில் வயற்றுப்பாட்டுக்கு உத்தியோகம் சம்பாதிக்க வந்தவனுக்கு இத்தலயாத்திரை செய்ய மனம் நாடியது. நாரீ

மணி தரிசனைதான் கிடைத்தது. பிறிதொன்றும் நாடிலது என்மனம். ஆம் என் கன்மனம். என்னாலாவதொன்றுமில்லை. ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே, அடக்குவித்தால் யாரொருவர் அடங்காதரே, ஓட்டுவித்தால் யாரொருவர் ஓடாதாரே, உருகுவித்தால் ஆரொருவர் உருகாதாரே, பாட்டுவித்தால் யாரொருவர் பாடாதாரே, பணிவித்தால் யாரொருவர் பணியாதாரே, காட்டுவித்தால் யாரொருவர் காணாதாரே, எல்லாம் கண்ணுதலின் கருணை.

நானென்று நினைத்தேன் அது ஒன்றாய் முடிந்தது. எல்லாம் எனையாளும் ஈசன் முருகேசன் செயல் அவரையே துதிப்பன். படமுடியாதினித்துயரம் படமுடியாதரசே, பட்டதெல்லாம் போதும் போதும், பூவேமணமே, பொருளே யருளே, கோவே குகனே, குருவே திருவே, தேவே தெளிவே, அருளா ரமுதே, அழகாவமலா, வள்ளி மணாளனே, மாயோன் மருகனே, மயில்வாகனனே, கருணாலயனே, கடம்பா சரணம், கந்தா சரணம். அபயம் அடைந்தோரை, அணைப்பது அறுமுகன், அருள் இயல்பு—என அகிலமெலாம் அறியும். ஆகவே ஆரநின்றவனே அடைந்தார்க்கருளாயே, ஆளுகந்தவனே அடைந்தார்க் கருளாயே, மாமயில் மாநட மாடவல்லவனே யடைந்தார்க் கருளாயே, போற்றிநின்றவர்க் கன்புசெய்தவனே யடைந்தார்க் கருளாயே, கூத்துகந்தபேரம்பலத் துறைச் சுதனே யடைந்தார்க் கருளாயே, அண்ணலாய வெம்மானே யடைந்தார்க் கருளாயே, வென்று பலவாறு பரிவுடன் போற்றிப் பிறகு கிழவன் வரதராசுடன், வந்தவேலையாகிய சுவாமிதரிசனை செய்து விடுதிக்குத்திரும்பி விரகவேதனையோடு இரவு

எப்படி கழித்தானோ ஈசனுக்கே அர்ப்பணம். பொழுதும் விடிந்தது. விடிவதுமே வெண்ணீற்றை மெய்யிற்பூசிப் பிறகு நித்ய கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு,—“நாவழுத்துஞ் சொன்மலரோ நாளுநிக்கும் பொன் மலரோ, தேவையுனக் கின்னதென செப்பாய் பராபரமே.” என்கிற திருவாக்கின்படிக்குப் பகவானைப் பலகாலும் வாயார நாத்தழும்பேறப் போற்றித் துதிப்பதற்குத் தேவார திருவாசகத் திருப்புகழ்ப் பாசுரங்களே பான்மையுள்ளனவெனத் தெளிந்து அதே அப்பியாசத்தையே விரதமாகக்கொண்ட மருதப்பன் மனதாரத் திருமுறை பாராயணஞ்செய்து கிழவனோடு சோமவார சேவைக்குக் கோயிலினுட் பிரவேசித்து வினாயகர் சந்நிதி தோத்திரம் முடிந்து முருகவேள் தரிசனைசெய்யப் பிரதட்சணைபண்ணத் திரும்பியபோது, போகவதியாகிய மல்லிகை பூசைமுடிந்து வீடு நோக்கிச் செல்பவள், கிழவனைப்பார்த்து, என் பாட்டா நேற்றுபோல் இன்றும் பண்ணாதே - நாங்கள் யாரும் சாப்பிடாமல் காத்திருப்போம். அவசியம் அவர்களை என் வீட்டுக்குச் சீக்கிரம் அழைத்துவா என்று சொல்லிப் போனாள்.

சிவபூஜை பண்ணவந்த காலத்தே வேறொன்றையுமே சிந்தியாது,—கையொன்று செய்ய விழியொன்று நாட என்கிற பாசுரத்தின்படியே—பகவத்கீதையிலும் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா—(யோகியானவன் உடம்பையும், தலையையும், கழுத்தையும், அசையாது நேரே வைத்துக்கொண்டு நிலைத்தவனாய், தனது மூக்கின் நுனியைப்பார்த்தும், சுற்றுப்புறங்களைப் பாராதும், மனத்தை ஒரு தலையாகச்செய்து,

மன இந்திரியங்களின் தொழிலை அடக்கியவனாய் ஆஸனத்தில் அமர்ந்து, பக்தி கைகூடுவதற்காக யோகத்தைச் செய்யவேண்டும் (VI 12-13), சொல்லி யிருப்பதுபோல உண்மை தியானத்திலேயே யிருந்தான் மருதப்பன் ஆதலாலே, மல்லிகையின் மலர்ந்த சொற்கள் செவியிடைச் செல்லவில்லை. ஆனாலும் அவ்வடிவழகியின் சப்தம் செவியில் எட்டியது! அவள் செய்கை கண்ணாரக் கண்டான் ஆயினும் அறிவைக்கொண்டு மனத்தை யழுத்திப் பரவசப் படுத்திப் பாடுவான்.

"பத்தனாய்வாழமாட்டேன் பாவியேன்பரவிவந்து
சித்தத்துளைவர்தீய செய்வினைபலவுஞ்செய்ய
மத்துறுதயிரேபோல மறுகுமென்னுள்ளந்தானு
மத்தனேயமரர்கோவே யாரூர்மூலட்டனீரே."

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா, நித்தலும் எம்பிரானுடையகோயில்புக்குப் புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப் பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித் தலையாரக்கும்பிட்டுக் கூத்துமாடிச் சங்கரா ஜய போற்றி போற்றி யென்றும், அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதியென்றும் ஆரூரா வென்றென்றே அலறுநில்லே யென்று, உரோமஞ் சிலிர்ப்பத் தேகம் புளகாங்கிதங் கொள்ள ஆனந்த வருவிசொரிய சொற்பதங்கடந்த துரிய மெய்ஞ்ஞான சுகவாரியில் ஈடுபட்டுத் தியானித்துத் தில்லை திருநடன ஒலி, பூஜைமுடிவில் கேட்டாலன்றி பூஜையிலிருந்து எழாமல் பூஜையே பெருக்கிக் கொண்டிருந்த * சேரமான் பெருமானாயனார்போலத், தன்வழமைப்படிப்

* பெரிய புராணம் பார்க்குக.

பாடித் துதித்துப் பசுவைப்பிரியுங் கன்றுபோலக் கதறித் தேறித்தெருவிடை வந்தான் வருந்தியிருக்கும் மருதப்பன்.

காத்துக்கொண்டிருந்த கிழவன் பரிவுடன் உபசார வார்த்தை பேசிக்கொண்டும், மருதப்பனின் பக்தியின் திறத்தினைத் தோத்தரித்தும் வியந்தும் வீடுகொண்டுவந்து சேர்த்தினன்.

---

8 அடிசில் வடித்தாள் வடிவழகி.

ஸ்கந்தபவனத்தின் அமைப்பைப் பார்த்துத் திக்பிரமைகொண்டு தம்பித்து நின்றுவிட்டான் மருதப்பன் மரியாதையோடு எதிர்கொண்டு நின்று உபசரித்தார் உயர் திரு கணபதி முதலியார். இவர் பெயருக்கேற்ற யானையொன்று சங்கிலியினால் பிணைக்கப்படாமல் சுயேச்சையாகத் திரிந்துகொண்டும் மல்லிகை ஊட்டும் அரிசியும் பழமும் பருகிக்கொண்டிருந்த தொருபுறம். இவ்வற்புதக் காட்சியினைப்பார்த்துப் பரிதபித்து நின்றான். இம்மெல்லியாள் கையில், அரிசியும் பழமும் கலந்து யானைக்கு ஊட்டும்போது உறுத்தாதா. பரிதாபம் பரிதாபம் என நினைத்து நின்ற இவனது தோற்றத்தினாலே கண்டுகொண்ட கணபதி முதலியார் சிறுவனைப்பார்த்துச் சிந்தியாதேயும்.

இவள் அன்னை இவ்வானை வளர்த்தாள். இவ்வானை இத்தேனைத் தந்தது எந்தனுக்கு என்று வேடிக்கையாக மல்லிகையைக்காட்டி, வா அம்மா மல்லிகா என்று பரி

வுடன் அழைத்தார்—உடனே திரும்பிப்பார்த்த மல்லிகா மருதன் இருப்பதுதெரிந்து ஆனந்தங்கொண்டு வெருண்டு மற்ரோர்வழியாக உள்ளுக்குள் நுழைந்தாள். போஜன சாலையில் சரிவர பரிமாறுதல் செய்திருக்கின்றனவாவெனப் பார்வையிட்டு பாட்டனுரிருக்கு மிடமாகிய வெளி தாழ் வாரத்தில் உள்ள எச்சரிக்கை மணியை சப்திக்கச் செய்தாள்.

இந்தச்சப்தங்கேட்டதும் தலைவர்—தம்பி எழுந்திரு நாம் பொசித்துச்சற்று இளைப்பாறும் போது சவிஸ்தாரமாகச் சகல சங்கதிகளையும் பேசலாம் என்ருர். அதற்கவர் அப்படியே யாகட்டும் என எழுந்திருக்க, பெரியவர் வள்ளி விலாசம் பூஜை அறைக்கு அழைத்துச் சென்ருர். அங்கு இருந்த அமைப்பின் ஒழுங்கைப் பார்த்துப்பரவசப் பட்டிருந்த போது, ததும்பிய வாராமையால்—" நான் மறக்கினுஞ் சொல்லு நா நமச்சிவாயவே "—என்கிற ஸ்ரீமத் சுந்தர மூர்த்தி நாயனுரது திருவாக்குக்கிணங்க, தன்னை யறியாமல் " மனமெனுந்தோணி பற்றி, மதி யெனுங் கோலையூன்றிச், சினமெனுஞ் சரக்கையேற்றிச்செறி கடலோடும் போது, மதனெனும் பாறை தாக்கி, மறியும் போது அறியவொண்ணுத உனை உன்னும் உணர்வை நல்காய், ஒற்றியூருடைய கோவே "—என்கிற அப்பர் சுவாமிகள் திருவிருத்தம், உரோமஞ்சிலிர்க்கத்தேகம் புள காங்கிதங் கொள்ளுமாறு, கண்ணீர் அருவிபோல வழிய வழுத்தினுன், வழுதியாய மருதப்பன்.

மல்லிகையும்,--மகுடபதியாகிய மருதவாணனைப்பார்த்துப் பேரானந்த முற்றுள்—மருதப்பன் மெய்ப்பக்திக்குத்

திருப்தி அடைந்து அருகிருந்த அர்ச்சகராகிய அர்த்த நாரீச்சுர அய்யரை மகாதீபாராதனை செய்யப்பிரார்த்தித் தாள். அன்று சோமவாரமாகையால், அறுசுவையோடு கூடிய அரிய அமுது நிவேதனம் படைக்கப்பட்டிருந்தது. இவ்வளவு அருமையான சோடசோபசாரங்களுடன், திருச் செந்தூர் செந்தில் வேலர், போலவே பிரதிட்டை செய்யப் பட்டிருந்த ஸ்ரீ வள்ளி தேவானை சமேத சுப்பிரமணிய சுவாமிக்குப் பூஜாவிசேடங்கள் நிறைவேறின. விபூதி பிர சாதங்கள் யாவருக்கும் வழங்கப்பட்டன.

ஸ்ரீ கணபதி முதலியார் மாளிகையில் அவரும் அவர் சுற்றத்தினரும் போஜனஞ் செய்யுமிடத்திற்கு *வந்தி விலாசம் எனவும், பாங்கட்கு மாகேசுர பூசை அதாவது அன்னதானஞ் செய்யுமிடத்திற்குச் சிறுதொண்டர்சித்விலா சம் எனவும் மங்கையர்கள் கூடும் இடத்திற்கு "மங்கையர்க் கரசி மஹால்" எனவும், ஆடவர்களை எதிர் கொள்ளும் விடு திக்கு "கண்ணப்பர்க்கருணாலயம்" எனவும், புராணக்கால க்ஷேபங்கள் நடத்துமிடத்துக்குச் "சேக்கிழார் சேவால யம்" எனவும், தேவார பாடசாலைக்குஞ், சிவபக்தர்கள் நாடு மிடத்திற்கும் நால்வர் பவனம் எனவும், சகலமான நூல் கள் ஆராய்ச்சிசெய்யப் "பட்டினத்தார் புத்தகச்சாலை" யெனவும், நிட்டை அநுட்டானத்திற்குத் "தாயுமானார் தபோநிலையம்" எனவும், தினசரிப்பத்திரிகைகள் படிப்ப தற்காக "வள்ளுவர் வாசகசாலை"யெனவும், இசைபாடுவ தற்கு "அருணகிரி அருள் நிலையம்" யெனவும்-இப்படிப் பல பாகங்களோடு கூடியது, ஸ்கந்தபவனம் என்னும் மாளிகை.

---

*வந்தி மகிமை பிட்டுக்கு மண்சுமந்த படலம் பார்க்க

அந்த அந்த விடுதிகளுக்கு விதித்திருக்கிற படிக்கு விக்கினமின்றி விநாயகர் திருவருளால் செயல்கள் நடத்தப் பட்டு வருகின்றன. குறித்த தினத்தில், மருதப்பன் அன்று நாழிகழித்து வந்தமையால், "சிறுத்தொண்டர் சித்விலாசத்தில்" சிவனடியார்களுக்கு எல்லாம் திருவமுது படைக்கப்பட்டு அவர்கள் எல்லாம் அறுசுவையுணவருந்தி உண்டயிளைப்புத்தொண்டருக்குண்டு என்றுப்போல் அவர்கள்விடுதியாகிய நால்வர் பவனத்திற்குப்போய்விட்டார்கள். ஆனபடியினுலே, அடியார்களுக்கு அட்டிட்டல் காணுதே, அருமை ஐயா வுடன் வந்தி விலாசத்திற்கு விஜயஞ் செய்தான். எல்லா சுற்றத்தினரும் (The Dependents,) வந்தி விலாசத்தின் ஒரு புறத்தாழ்வாரத்தில் மரியாதைகாரணமாக ஒதுங்கி பரிசாரகர்களால் விசாரிக்கப்பட்டுச் சாப்பிட்டுக்கொண் டிருந்தார்கள்.

பெரியவருக்கு எப்போதுமே தனது அருமைப் பேத்தி மல்லிகைதான் வட்டிக்கவேணும். எப்போதும் தனித்தே சாப்பிடும் வழமையுடையவர். அன்று மருதப்பனேடு,—முன்பின் தெரியாத புது மனிதனேடு—உண்பதற்கு இசைந்ததுமல்லாமல், அந்நியனுக்கும் தனக்கும் வட்டிப்பதற்கு வழக்கப்படி வடிவுடை யம்மையாகிய மல்லிகையையே கூவினுர். அப்பாக்கியத்திற்கே எதிர் பார்த்துக் கொண்டிருந்த ஏந்திழை உடனே இசைந்து, வெகு உருசிகரமான அறுசுவை பதார்த்தங்கள் எல்லாம் வாழையிலையில் சுற்றிலும் பரிமாறி, இக்குவியில்கள் எல்லாம் சிறு குன்றுகள்போலவும், சீனிக்கற்கண்டும் ஏலரிசியும், குங்குமப்பூவுங் கலந்த அன்னம் பொன்மலைபோல நடுவே விளங்கவும் வட்டித்தாள்—சாப்பிடும்படி உபசரித்தார் பெரியவர்.

தாங்கள் இவ்வழகிய கூடத்திற்கு வந்திவிலாசம் எனப் பெயரிட்டது மிகவும் பொருந்தி யிருக்கிறது. சேந்தனிட்டகூழ் மாந்த இனிது எனச் சாப்பிட்டச் சிவபெருமானுக்கு வந்தி தந்த பிட்டு ச்சால உருசி கொடுத்ததுபோல இன்று யானும் உண்கின்றேன் என அவருக்கு வந்தனஞ் செய்து வந்தியை மனதில் எண்ணினவாய்,—யாவருக்குமாம் யிறைவர்க்கொரு பச்சிலை, யாவர்க்குமாம் பசுவிற்கொரு வாயுறை, யாவர்க்குமாம் உண்ணும்போ தோருகைப்பிடி, யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே.'' என்கிற திருமூலர் திருவாக்கின்படிக்கு ஒரு கவளம் எடுத்து கையில் வைத்துக்கொண்டு மயங்கினன். காக்கைக்கு வைக்க வேண்டுமென்கிற குறிப்பை யுணர்ந்த மல்லிகை, மடப்பள்ளி மனிதனைக் கூப்பிட்டாள். எவனும் வரவில்லை. அகஸ்மாத்தாக அப்புறம் சென்றிருந்தார்கள். மருதப்பனைப் பார்த்தபோதே பெரியவர் "மல்லிகை மருதன் மங்களானிபவந்து:" என மனதில் வாழத்திவிட்டார். ஆகவே, மல்லிகா! காலந் தாழ்த்தாதே? ஆள் வராவிட்டால் அதிதியைக் கார்க்கவைப்பதா? நீ தான் அப் பிடியன்னத்தை வாங்கி காக்கைக்கு வைக்கலாகாதா வென்றூர் பெரியவர்.

தாதா அப்படியே யாகட்டுமெனத் தனது நடையினுல் தெரியச்செய்து அவள் செங்காத்தை நீட்டவும் இட்டான் அன்னத்தை அகங்கையினிலே. தீண்டற்கரிய திருமேனியாள் தீண்டப்படவும் மின்சாரச் சக்திபோல கை நடுக்கங்கொள்ளவும், திரட்டியிருந்த அன்னக்கவளம் அவள் கையிலிருந்து சிதறி வீழ்ந்துவிட்டது. அதுகளை ஒருபுறம் இருத்திக்கொண்டு, வேறுகவளம் கடினமா

யுருட்டித்தந்தான். அவ்வேலை இனிது முடிந்தது. சிதறப்பட்ட அன்னம் அமிர்தமே போல் உட்கொண்டான் மருதப்பன். இவ்வருஞ் செயல்களைக் கருடப் பார்வையாகக் கவனித்துக்கொண்டே யிருந்த கள்வராகிய கணபதி முதலியார் களிமிக வெய்தினர்.

---

9 நிராசையின்றேல் தெய்வ முண்டோ.

இவ்வளவு இரகசிய விளையாட்டின் இயல்பைப் பாராது பார்த்திருந்த பெரியவர், மருதப்பனோடு உண்ட பின்பு இருவருமாக அன்பொழுகும் கண்ணப்பர் கருணாலயத்திற்கு வந்து அமர்ந்தார்கள். கனிவர்க்கங்கள் - சந்தனம் புஷ்பம் தாம்பூலம் முதலியன மல்லிகை கொணர்ந்தாள். அப்போது, மல்லிகா ! நீ சாப்பிட்டுச் சீக்கிரம் வா, இன்று சுதினம், நாளையென்பது நமனதுநாள், இன்றே அதுவும் இப்போதே இவரிடம் இனி நீ பாடங் கற்கவேண்டும்; இவரதுபார்வையினாலேயே இவர் சொல்லுக் கடங்கியவர்; சத்தியநிபுணர்; அன்பே சிவமெனக் கொண்டிருக்குஞ் சிரேஷ்டர்; உன்னை இவர் வசம் ஒப்பிக்க மனமிசைந்துளேன்; உங்கள் இருவர்இயல்பும் பொருத்தமுள்ளதென முற்றுந்தெளிந்தேன்; அம்மா ஆராவமுதே ! நீ பொறுமையுடன்போய் உனது அக்காளையும் சாப்பிடச் செய்து நீயும் சாப்பிட்டு ஒரு சுமார் 2 அல்லது 3-மணி சாவகாசங் கழித்துவா; உனது பி-ஏ வகுப்புப் புத்தகங்கள் யாவும் எடுத்துக் கொண்டுவா அம்மா ! வென, மிகவும் பரிவுடன் ஏவினர் பெரியவர்.

மிகவும் ஆர்வமுடனும் அங்கீகரித்த பார்வையுடனும் தனது தாதாவைப் பார்த்துக்கொண்டே யிடைக்கண்ணால், கவிராயராகிய ஆசிரியரை முறுவலுடன் முற்றுகை யிட்டுச் சென்றாள் மல்லிகை.

அப்பா தம்பி! இன்று சுதினமென்றே கருதுகின்றேன்; உன்னையொத்த உத்தமன் உளனோ இலையோ? அதவாயிருந்தால் எங்குளனோ? எவ்வாறு பெறுவனோ? என்கிற ஏக்கமே பெரிதும் கொண்டிருந்த எந்தனுக்கு, விருந்தினனா யெழுந்தருளிய உந்தனுக்கு, மனமுவந்து வந்தனஞ் செய்கிறேன்; முதலில் சந்தித்த போது, எனது கதையை தெரிந்துக்கொள்ள நீ விரும்பினையில்லையாயினும் நானே சொல்லுவன் அதுவும் சமீபத்திலேயே சொல்லுவன் என்று சொன்னேனல்லவா? அது ஞாபகமிருக்கிறதா யெனக்கேட்டார் கணபதி முதலியார்.

ஆம் ஐயா! அதை நான் மறக்கவில்லை, சமயமறிந்து தெரிந்து கொள்ளலாமெனப் பொறுமையுடனிருந்தேன். சௌகரியமானால், இப்போது உகந்த வேளைதான் சொல்லுங்கள் என்று விடையளித்தான் விடைப்பாகன் பக்தனாகிய மருதப்பன். உடனே பெரியவர் சிவா திருச்சிற்றம்பலம் எனச்சொல்லிக்கொண்டு, சாய்வு நாற்காலியில் ஆரோக்யமாகத்தாழ்ந்து இருந்தவர், எழுந்து யௌவன சுகுமாரனைப்போல் நேரே ஒழுங்காயமர்ந்து சொல்லத் தொடங்கினார்.

அப்பா மருதப்பா! வெகு கவனமாய்க்கேள். கேவலமான விஷயமென எண்ணாதே. மனதை ஒருநிலைப்படுத்திச்